# 19 செபமாலைப் பக்தி



19.1 செபமாலைப் படம்

திருத்தந்தை 5ஆம் பயஸ் அவர்களுடைய காலத்தில், கத்தோலிக்கர்களுக்கு துருக்கி நாட்டினரால் பல அச்சுறுதத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே திருச் சபையின் பாதுகாப்பிற்காக் செயற்படும் படியாக திருத்தந்தை ஐரோப்பிய மக்க ளைக் கேட்டுக்கொண்டார். அவர்களும் திருத்தந்தையின் வேண்டுகோளுக் கிணங்க ஓர் இராணுவப் படையை ஏற்படுத்தினார்கள். இருப்பினும் யுத் தத்தில் ஈடுபடுவதற்கான பயிற்சி அவர்களிடம் காணப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட தினத்திலே செபமாலையைப் பக்தியுடன் செபித்துக் கொண்டே போர்க்களம் நுழைந்தார்கள். யுத்தம் நடைபெற்றுக் கொண் டிருக்கும்போது செபமாலையைச் செபிக்கும்படியாக ஐரோப்பிய மக்களை திருத்தந்தை 5ஆம் பயஸ் கேட்டுக்கொண்டார். உரோமையில் ஓர் செபமாலைப் பேரணியும் இடம்பெற்றது.

''லெபன்டோ'' எனுமிடத்தில் வைத்து ஐரோப்பியப் படையினர் துருக்கிய இராணுவத்தை வெற்றி கொண்டனர். இந்த யுத்தத்தில் எமது ஐரோப்பிய இராணுவம் தோற்கடிக்கப்பட்டிருந்தால் துருக்கிய இராணுவம் இத்தாலியைக் கைப்பற்றி உரோமையின் அதிகாரத்தைக் கைப்பற்றி இருக்கும். துருக்கியின் சுல்தான் உரோமையின் பேரரசனாகி இருக்கக் கூடும். கி.பி. 1571 ஆம் ஆண்டு ஐப்பசி 07 ஆம் நாள் பெற்றுக் கொண்ட இந்த வெற்றி செபமாலைப் பக்தியினூடாகவே பெறப்பட்டது என்று நம்பினார்கள்.

இதன் நிமித்தமாக திருத்தந்தை 5ஆம் பயஸ் அவர்கள் ஐப்பசி மாதம் 07 ஆம் திகதியினை ''வெற்றிமாதா திருவிழா'' என்று பெயரிட்டார். பின்னர் 1573 ஆம் ஆண்டு இவ்விழா ''செபமாலை அன்னை விழா'' என திருத்தந்தை 13ஆம் கிரகரியினால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.



இலவச விநியோகத்திற்காக

மேலும் 1716 ஆம் ஆண்டு முழுத் திருச்சபையும் இவ்விழாவினைக் கொண்டாட வேண்டுமென திருத்தந்தை பதினோராம் கிளமன்ட் பணிப் புரை வழங்கினார்.

இக்கட்டான சூழ்நிலையிலும் பேதகங்களின்போதும் திருச்சபையானது செபமாலையை செபிப்பதன் பயனாக எதிர் கொண்ட பல சவால்களை வெற்றி கொண்டது. இதனால் செபமாலைப் பக்தியில் வளர்ந்து அதனைச் செபிக்கத் திருச்சபைத் தாய் அனைத்து மக்களையும் அழைக்கின்றாள்.

**செபமாலையின் வரலாறு**

கத்தோலிக்க வழிபாட்டு மரபிலே செபமாலை நீண்ட ஒரு வரலாற்றைக் கொண்ட பக்தி முயற்சியாக விளங்குகிறது.

- ★ கி.பி. 3 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்த கத்தோலிக்க துறவியர்கள் இப்பக்தி முயற்சியை ஆரம்பித்தார்கள்.
- ★ கி.பி. 1214 ஆம் ஆண்டளவில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த தூய டொமினிக் (சுவாமிநாதர்) செபமாலைப் பக்தி முயற்சியை அறிமுகப்படுத்தினார். அவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட செபமாலை பக்தியையே நாம் இன்றும் கடைப்பிடிக்கின்றோம்.

செபமாலையில் எமது மீட்பின் மறையுண்மைகளை நாம் தியானிக் கின்றோம். இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, பாடுகள், மரணம், உயிர்ப்பு மற்றும் விண்ணேற்பு இதில் உள்ளடங்குகின்றது. இம்மறையுண்மைகளில் இயேசுவின் இறையாட்சிப் பணி உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. எனவே திருத்தந்தை தூய இரண்டாம் ஜோண் பவுல் ஒளியின் மறையுண்மைகளை அறிமுகப்படுத்தி, இயேசுவின் இறையாட்சிப் பணியினைத் தியானிக்க அழைத்தார். இதனால் இன்று இருபது மறையுண்மைகளைத் தியானிக்கின்றோம்.

| தினம் | தியானிக்கும் நிகழ்வுகள் / இயேசுவின் வாழ்வின் நிகழ்வுகள் |
|---|---|
| திங்கள், சனி, திருவருகைக் கால ஞாயிறு கிறிஸ்து பிறப்பு காலத்தில் ஞாயிறு தினங்கள் | **மகிழ்ச்சி நிறை மறையுண்மைகள்**<br>1. கபிரியேல் தூதர் தேவதாய்க்கு மங்கள வார்த்தை சொன்னது.<br>2. தேவமாதா எலிசபெத்தம்மாளை சந்தித்தது.<br>3. இயேசு பிறந்தது.<br>4. இயேசுவை ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக் கொடுத்தது.<br>5. காணாமற்போன இயேசுவைக் கண்டடைந்தது. |
| செவ்வாய், வெள்ளி, தவக்கால ஞாயிறு | **துயர் நிறை மறையுண்மைகள்**<br>1. இயேசுவுக்கு பூங்காவனத்தில் இரத்த வியர்வை வியர்த்தது.<br>2. இயேசுவைக் கற்றூணில் கட்டியடித்தது.<br>3. இயேசுவுக்கு முள்முடி சூட்டியது.<br>4. இயேசு சிலுவை சுமந்து சென்றது.<br>5. இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்தது. |
| புதன் உயிர்ப்பு மற்றும் பொதுக்கால ஞாயிறு | **மகிமை நிறை மறையுண்மைகள்**<br>1. இயேசு உயிர்த்தெழுந்தது.<br>2. இயேசு விண்ணுலகிற்கு எழுந்தருளியது.<br>3. பரிசுத்த ஆவியின் வருகை.<br>4. தேவதாயின் விண்ணேற்பு.<br>5. தேவதாய் விண்ணுலக, மண்ணுலக அரசியாக முடி புனையப்பட்டது. |
| வியாழக் கிழமை | **ஒளிநிறை மறையுண்மைகள்**<br>1. இயேசு யோர்தான் ஆற்றில் திருமுழுக்குப் பெற்றது.<br>2. இயேசு கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரை இரசமாக்கியது.<br>3. கலிலேயாவில் இயேசு பணியைத் தொடங்கியது.<br>4. இயேசுவின் தோற்றம் மாறியது.<br>5. இயேசு திவ்விய நற்கருணையை ஏற்படுத்தியது. |



இலவச விநியோகத்திற்காக

வழமையான செபமாலையையும் இறந்தோருக்கான செபமாலையையும் சந்தர்ப்பத்திற்கேற்பப் பயன்படுத்தலாம். செபமாலைக்கென ஒரு ஒழுங் கமைப்பும் சில சிறப்புச் செபங்களும் உண்டு. இந்த ஒழுங்கு முறையைப் பயன்படுத்தி மறையுண்மைகளைப் பக்தியோடு தினமும் குடும்பமாக செபமாலையைச் செபிப்பது முக்கியமாகும். இது குடும்பத்திற்குச் சிறந்த ஆசீர்வாதமுமாக அமையும். ''அன்னை மரியாவோடு உறவு கொள்ள விரும்புவோருக்கு செபமாலையைத் தவிர வேறு சிறந்த வழி எதுவு மில்லை'' எனத் தூய இரண்டாம் ஜோண் பவுல் திருத்தந்தை கூறுகின்றார். எனவே செபமாலையைக் குடும்பமாகத் தினமும் செபிப்போம்.

**வழமையான செபமாலை (அன்றாடம் செபிக்க)**

- திருச்சிலுவை அடையாளம்
- திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை (விசுவாசப் பிரமாணம்)
- இயேசு கற்பித்த செபம்
- அருள் நிறை மரியே - (3)
  (ஒவ்வொரு அருள் நிறை மரியே செபத்தைச் சொல்ல முன் பின்வரும் செபத்தைச் செபிக்கலாம்.)

1ஆம் **அருள் மரி முன்**
தந்தையாகிய இறைவனுக்கு மகளாயிருக்கின்ற தூய அன்னையே எங்க ளிடத்தில் இறைநம்பிக்கை என்ற புண்ணியம் வளரும்படி இயேசுவை மன்றாடும். (அருள் நிறை மரியே...)

2ஆம் **அருள் மரி முன்**
மகனான இறைவனின் தாயாய் இருக்கின்ற தூய அன்னையே எங்களிடத்தில் இறை எதிர்நோக்கு என்ற புண்ணியத்தில் வளரும்படி இயேசுவை மன்றாடும். (அருள் நிறை மரியே...)

3ஆம் **அருள் மரி முன்**
தூய ஆவியாகிய இறைவனுக்கு பிரியமுள்ளவராயிருக்கின்ற தூய அன்னையே இறைபக்தி என்ற புண்ணியத்தில் வளரும்படி இயேசுவை மன்றாடும். (அருள் நிறை மரியே...)

- திரித்துவப் புகழ் (தந்தைக்கும் மகனுக்கும்...)
- ஓ என் இயேசுவே (பாத்திமா செபம்)
- மறையுண்மைகளைத் தியானித்தல்
- அருள் நிறை மரியே
- இயேசு கற்பித்த செபம்
- திரித்துவப் புகழ்
- ஓ என் இயேசுவே

} ஐந்து காரணிக்கங்களும் இவ்வொழுங்கு முறையிலே கூறப்படும்.

ஐந்து காரணிக்கங்களின் நிறைவில்

- காணிக்கைச் செபம் (அத்தியந்த மகிமையுள்ள)
- கிருபை தயாபத்துச் செபம்
- மன்றாட்டு மாலை (விரும்பியது)

செபமாலையின் நிறைவில் சொல்லக்கூடிய வேறுபல மன்றாட்டு மாலைகளில் சில வருமாறு :-

- இயேசுவின் திரு இருதய மன்றாட்டு மாலை
- தேவதாயின் மன்றாட்டு மாலை
- தூய அந்தோனியார் மன்றாட்டு மாலை
- தூய செபஸ்தியார் மன்றாட்டு மாலை
- தூய யூதா ததேயு மன்றாட்டு மாலை

## இறந்தோருக்கான செபமாலை :-

(இறந்த ஆன்மாக்கள் மாதத்திலும் கத்தோலிக்கர் இறக்கின்ற பொழுதும் அவர்களின் நினைவு நாட்களின் போதும் இதனைச் செபிக்கலாம்.)

- விசுவாச அறிக்கை
- இயேசு கற்பித்த செபம்
- அருள் நிறை மரிக்குப் பதிலாக

ஓ நல்ல இயேசுவே

பதில் : உத்தரிக்கின்ற ஆன்மாக்கள் பேரில் இரக்கமாயிரும்.

- திரித்துவப் புகழுக்குப் பதிலாக

  மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

பதில் : நித்திய இளைப்பாற்றினை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே

(துயர் நிறை அல்லது மகிமை நிறை மறையுண்மைகளை இச்செபமாலையின்போது தீர்மானிக்கலாம். இச்செபமாலை பிரதேச வாரியாக வேறுபடக் கூடும்.)

- இச்செபமாலையின் முடிவில்

  இச்செபமாலையின் முடிவில் இயேசு, மரிசூசையே எனது ஆன்மாவையும் உடலையும் உம் திருக்கரத்தில் ஒப்புக் கொடுக்கின்றேன். இயேசு மரி சூசையே எனது மரண நேரத்தில் எனக்கு உதவியருளும்.

**செயற்பாடு**

1. தற்போது நாம் பயன்படுத்தும் செபமாலைப் பக்தியை அறிமுகப்படுத்தியவர் யார்?
2. செபமாலையில் பயன்படுத்தும் 4 வித மறை உண்மைகளைத் தருக.
3. சாதாரணமாக செப மாலையில் நாம் பயன்படுத்தும்
   - காணிக்கைச் செபம்
   - கிருபை தயாபத்துச் செபம்
   - ஓ என் இயேசுவே செபம்

ஆகிய செபங்களை மனனம் செய்து பாட ஆசிரியரிடம் கூறவும்.



**வாழ்க்கைக்கு...**

CÓ¢÷uõ¸ UPõÚ ö\£©õø»°À £õÂUP¨£kQßÓ ö\£[Pø Í ©ÚÚ® ö\´P.